copper in the area. The Department however detected a six-mile long band of iron ore north of Ladapuram, and a few shorter ones near Kanavoy and Elambalar in the Pachamalai.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்திய சர்க்காருடைய "மினரல்" கண்டு பிடிப்பு இலாகாவினர் இவைகளை ஆராய்கிற காரணத்தால் பொதுவாகவே அகில இந்தியாவில் வேறு சில இடங்களில் இந்தப் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்ற காரணத்தால், அங்கு மட்டுமே இவைகளை எடுப்பதற்கான முயற்சியில் ஆர்வங் காட்டி, குறைவாகக் கிடைக்கும் பகுதிகளில் அலக்ஷ்யம் செய்து விடுகிறார்கள் என்ற கருத்துத் தோன்ற இடம் இருக்கிறது. ஆகவே, சென்னை சர்க்கார் தனியாகவே ஒரு இலாகா ஏற்படுத்தி, இக்குறைக்கு இடமின்றி கவனித்துக் கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருடைய கேள்வியில் இருக்கிற கருத்தை சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும், கனம் அங்கத்தினர் கேட்கின்றபடியினால் சொல்கின்றேன். இந்த 'சர்வே'-ஐ நடத்தினவர்கள் டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் அவர்களும் ஸ்ரீ என். கே. என். அய்யங்கார் அவர்களும்தான்.

SRI S. NAGARAJA MONIGAR : கோலாருக்குச் சமீபமாயுள்ள ஹோசூர் தாலூகாவின் வட பகுதியிலும், கிருஷ்ணகிரி தாலூகாவின் வட பகுதியிலும் தங்கம் இருப்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன என்பது வாஸ்தவமா ? பச்சை மலை, பவளமலை ஆகிய இடங்களைக் காட்டிலும் இந்த இடங்களில்தான் அதிகமாக அவைகள் கிடைக்கின்றன என்பதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : "ஜியாலாஜிகல் சர்வே" பிரகாரம் இந்த இடத்தில் செம்பு, தங்கம் அகப்படவில்லை என்று தான் தெரிகிறது.

Plantation workers

* 208 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have effected any settlement during April 1956 between the Plantation Workers' representatives and the managements with regard to wages and other amenities for the workers; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) With a view to bringing about an amicable settlement in the dispute regarding the implementation of the Plantation Award, the Minister for Home, the then Minister in charge of Labour, held during 1956, a series of discussions with the representatives of the estate-owners and the employees. As the parties were unable to come to a settlement themselves, certain terms were suggested by the Government as the basis for a settlement. As a section of labour did not agree to the suggestion, no final settlement has been effected and ratified. However, in estates in which labour has agreed to the terms suggested by the Government, the managements have been persuaded to implement those terms.

Sri P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, "ப்ளான்டேஷன்" தொழிலாளர்களுக்கு தனியாக ஒரு தொழில் கோர்ட் ஏற்படுத்தி, அந்தத் தொழிற் கோர்ட்டும் தீர்ப்பளித்திருந்தது. அந்தத் தீர்ப்பிலே கூறப்பட்டிருந்த சம்பள விகிதங்களைக் காட்டிலும் குறைவான சம்பள விகிதத்தை இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்குத் தெரிவித்ததா? அவ்வாறு தெரிவித்ததோடு மட்டுமில்லாமல், அந்தக் குறைவான சம்பள விகிதத்தை ஒத்துக்கொள்ளும் படியாகவும் அவர்களை மறைமுகமாய் நிர்ப்பந்தித்ததா?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்தத் தோட்டத் தொழிலில் இருக்கும் தகராறுகளைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட கோர்ட்டு $3\frac{1}{2}$ வருஷ காலம் நடந்தது. அதன் பிறகு ஒரு சம்பள விகிதமும், இன்னும் பல சலுகைகளும் அந்தத் தீர்ப்பின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பின்பு தோட்ட முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு அதை எடுத்துச் சென்று "ஸ்டே" வாங்கி விட்டார்கள். இந்தத் தீர்ப்பின் பேரில் சுப்ரீம் கோர்ட் முடிவு செய்வதற்கு இன்னும் மூன்று நான்கு வருஷங்கள் ஆனால், அதற்குள் தொழிலாளர்கள் பலர் மாண்டு விடுவார்களே என்று பயந்து, கூடிய அளவுக்கு, நல்ல முறையிலே, உடனடியாக, அதிகப்படியான சலுகை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நடுத்தரமாக ஒரு கூலி விகிதத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று சர்க்காருடைய அபிப்பிராயத்தைக் கூறினார்கள். அதைத் தொழிலாளர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இதில் எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லை. நாளைக்கு வருகின்ற பலாக்காயை விட இன்றைக்கு வருகிற களாக்காயே நல்லது என்பது தொழிலாளர் அங்கத்தினர்கள் நன்றாக அறிந்து கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : The Hon. Minister was just now saying that the whole matter was *subjudice* since it was pending before the Supreme Court . . .

Mr. SPEAKER : He did not say that. In a way, I was going to suggest myself that in view of the Labour Demand now under discussion, hon. Members, instead of spending time on putting supplementaries, may raise the subject during the discussion on the Demand.

Assembly Sessions in the Nilgiris

* 209 *Q*.—**Sri K. SATTANATHA KARAYALAR** (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to hold the Assembly Sessions in the Nilgiris during 1958?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir. If the House unanimously decides to hold a Session at Ootacamund, steps will be taken to convene a meeting of the Assembly at Ootacamund.

Sri S. LAZAR : Will the Government ascertain the views of the Members individually?

The Hon. Sri C. SUBRAMANIAM : I think it depends on the political parties and if all the parties agree, certainly steps could be taken.

Sri M. P. SUBRAMANIAM : சட்டசபைக் கூட்டத்தை சென்னையில் வைப்பதைவிட உதகமண்டலத்தில் வைத்தால் எவ்வளவு அதிகப்படியாக செலவு ஆகும் என்பதைக் கணக்கெடுத்து கனம் அமைச்சர் அவர்கள் சபைக்கு அறிவிப்பார்களா?